ARCH Disability Law Centre
425 Bloor Street East, Suite 110
Toronto, Ontario M4W 3R5
www.archdisabilitylaw.ca

(416) 482-8255 (Main) 1 (866) 482-ARCH (2724) (Toll Free)
(416) 482-1254 (TTY) 1 (866) 482-ARCT (2728) (Toll Free)
(416) 482-2981 (FAX) 1 (866) 881-ARCF (2723) (Toll Free)

2008/07

# பாகுபாடு காட்டலும், உளநல சேவைகளையும் ஆதரவுகளையும் பயன்படுத்தும் மக்களுமம திறன் குறைவு தொடர்பான சட்ட மையம

நீங்கள் ஓர் குடும்ப வைத்தியர், தாதி, உளச் சிகிச்சையாளர், உளவியலாளர் அல்லது அதை ஒத்த நபரிடமிருந்து உளநல சேவைகளையும் ஆதரவையும் பயன்படுத்திக்கொண்டிருந்தால் அல்லது பயன்படுத்தியிருந்தால் இந்த விடயத் தாள் உங்களுக்கு உதவி புரிவதாக இருக்கும். அத்துடன்,

- உங்கள் உளநலம் தொடர்பான நடத்தையின் காரணமாக ஓர் உணவுவிடுதியிலிருந்தோ அல்லது வேறோர் பணியிலிருந்தோ நீங்கள் நீங்கிச் செல்லுமாறு கேட்கப்பட்டால்;
- உங்கள் உளநல வரலாற்றின் காரணமாக நீங்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தால் அல்லது, உங்கள் உளநல வரலாற்றின் காரணமாக ஓர் மேலதிகாரி உங்களுக்கு பதவியுயர்வு வழங்காவிட்டால்;
- உங்கள் உளவியல் திறன்குறைந்த தன்மையின் காரணமாக உங்களுடன் வேலைசெய்பவர்கள் உங்களைத் துன்புறுத்தினால்;
- உங்கள் உளநல வரலாற்றின் காரணமாக, உங்களுக்கு வீட்டை வாடகைக்கு விட ஓர் வீட்டுரிமையாளர் மறுத்தால்;
- உங்கள் உளவியல் திறன்குறைந்த தன்மையின் காரணமாக, நீங்கள் வாழும் நகர அல்லது மாகாண, சமஷ்டி அரசாங்கங்கள் உள்ளிட்ட அரசாங்கமானது, உங்களை நியாயமற்ற முறையில் நடத்தினால்;
- உங்கள் உளவியல் திறன் குறைந்த தன்மையினால் ஓர் சட்டம் அல்லது அரசாங்கக் கொள்கை உங்களை நியாயமற்ற முறையில் நடத்தினால்;
- தற்போது உங்களுக்கு உளநலகுறைவு எதுவும் இல்லாத போதும் அல்லது நீங்கள் அத்தகைய அறிகுறிகள் எதனையும் அனுபவிக்காத போதும், யாராவது உங்களுக்கு உளநல பிரச்சனைகள் உள்ளது என எண்ணியதால் நீங்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டிருந்தால்; அல்லது,

வேறு ஏதாவது இதையொத்த நிலமைகள் இருந்தால்;

இது உங்களுக்குப் பயனுடையதாகும்.

**ஒரு உளநல பிரச்சனையொன்றைக் கொண்டிருத்தல், ஒரு வகையான திறன் குறைந்த தன்மையாகும் என்பதை அறிவது முக்கியமாவதுடன், எந்த வகையான திறன்குறைந்த தன்மையுடைய நபர்களுக்குமுள்ள அதே உரிமைகள் உங்களுக்கும் உள்ளதென்பதை அறிதல் முக்கியமானதாகும்.**

**உங்கள் உளநல பிரச்சனையின் காரணமாக நீங்கள் பாகுபடுத்தப்படவோ, அல்லது துன்புறுத்தப்படவோ முடியாது.**

**நீங்கள் உளச்சிகிச்சை வாட்டில் அல்லது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதனால் அல்லது முன்பு ஒருபோது அனுமதிக்கப்பட்டிருந்ததால், உங்களுக்கு பாகுபாடு காட்டவோ துன்புறுத்தவோ முடியாது.**

இத் தகவல்களில் அநேகமானவை ஒன்ராறியோவில் வசிக்கும் மக்களுக்கு பயனுள்ளவை.

## பாகுபாடு காட்டல் என்றால் என்ன?

இந்த தகவல் தாள் உங்கள் மனித உரிமைகள் பற்றியது ஆகும். உங்கள் உரிமைகளை நீங்கள் தெரிந்து வைத்திருத்தலானது உங்களையும் ஏனையவர்களையும் பாகுபாடு காட்டப்படலில் இருந்தும் துன்புறுத்தலில் இருந்தும் பாதுகாப்பதற்கு உங்களுக்கு உதவும்.

**பாகுபாடு காட்டல் என்பது, உதாரணமாக, உங்கள் இனம், பால், திருமண அந்தஸ்து, நீங்கள் எவ்விடத்தில் இருந்து வந்தவர், வயது அல்லது திறன்குறைந்த தன்மை போன்றவற்றின் காரணமாக நியாயமற்ற முறையிலோ அல்லது வேறுபாடாகவோ நடத்தப்படுவதைக் குறிக்கும்.** யாராவது உங்ளை நியாயமற்ற முறையில் நடத்தினாலோ அல்லது, உதாரணமாக உங்கள் திறன் குறைந்த தன்மையின் காரணமாகவோ அல்லது இனத்தின் காரணமாகவோ ஏனையவர்களுக்குக் கொடுக்கும் அதே சந்தர்ப்பங்களை உங்களுக்கு கொடுக்காவிட்டாலோ அது பாகுபாடு காட்டல் எனப்படும். எடுத்துக் காட்டாக, உங்களது இனம் அல்லது திறன் குறைந்த தன்மையின் காரணமாக உங்கள் மேலதிகாரி உங்களை வேலையில் இருந்து நீக்கினால், அது உங்கள் மேலதிகாரி உங்களுக்கெதிராக பாகுபாடு காட்டுகிறார் என்பதாகும்.

துன்புறுத்தலும் ஒரு வகையான பாகுபாடு காட்டலேயாகும். இது உங்களுக்கெதிரான அல்லது உங்களை தாழ்த்தும் நடவடிக்கைகள், குறிப்புகள், அவமதிப்புகள் போன்றனவற்றை அடக்கும். இந்தக் குறிப்புகள்; இனம், பால், பிரஜாவுரிமை, மதம், திறன்குறைந்த தன்மை, அல்லது உங்களை இனங்காணலின் முக்கிய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். வரவேற்கத்தகாதது என்று தெரிந்த போதும் ஒருவர் ஒன்றைக் கூறுவதன் மூலம் உங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் போதும் தொந்தரவு கொடுத்தல் நடைபெறுகின்றது. தொந்தரவு கொடுத்தலுக்கான உதாரணங்களாக, ஒருவர் ;

- இனரீதியான அவமதிக்கும் குறிப்புக்களை கூறுதல் அல்லது பரிகாசம் செய்தல்;
- உங்கள் உளத் திறன் குறைந்த தன்மையின் காரணமாக உங்களை அவமதித்தல்;
- ஒரு இனம் அல்லது மத அங்கத்தவர்களை தாழ்த்துமுகமாக படங்களை அல்லது கேலிச் சித்திரங்களைக் காட்டுதல்; அல்லது
- உங்கள் இனம், நிறம் அல்லது திறன் குறைந்த தன்மையின் காரணமாக உங்களை அவமதிக்கும் பெயர்களால் அழைத்தல்.

## ஒன்ராறியோ மனித உரிமைகள் சட்டத்தொகுப்பு

ஒன்ராறியோ *மனித உரிமைகள் சட்டத் தொகுப்பு* ஆனது ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொருவரும் பாகுபாடு இல்லாது சமமான உரிமைகளையும் சந்தர்ப்பங்களையும் கொண்டிருக்க வேண்டுமெனக் கூறும் மாகாண சட்டமாகும். உங்கள் இனம், நிறம், பால், திறன் குறைந்த தன்மை, வயது போன்றவற்றின் காரணமாக நீங்கள் பாகுபாடு காட்டப்படல், துன்புறுத்தப்படல் என்பவற்றில் இருந்து உங்களைப் பாதுகாக்குமுகமாக உள்ளதே இந்த *சட்டத்தொகுப்பு* ஆகும். ‘திறன் குறைந்த தன்மை’ என்பது திறன் குறைந்த உளத்தன்மையையும், உளநல சேவைகளையும் ஆதரவுகளையும் பயன்படுத்தும் அநேகமான மக்களையும் உள்ளடக்கும்.

கடைகள், உணவு விடுதிகள், போக்குவரத்து, வைத்தியசாலைகள், பாடசாலைகள், காப்புறுதி, வீடு பெற்றுக் கொள்ளல், ஒப்பந்தங்கள், தொழில், சங்கங்களில் அங்கத்துவம் போன்றவற்றில் பாகுபாடு காட்டப்படல் மற்றும் துன்புறுத்தப்படல் என்பவற்றில் இருந்து விடுதலை பெறும் உரிமை உங்களுக்கு உண்டு. உதாரணமாக,

- திறன் குறைந்த தன்மைகளைக் கொண்ட ஊழியர்களுக்கு, திறன் உள்ள மக்களைப் போன்றே அதே சந்தர்ப்பங்களையும் நலன்களையும் பெறும் உரிமை உண்டு. சிலசமயம், திறன் குறைந்த ஊழியர்கள், தமது தொழில் கடமைகளை செய்வதற்கு உதவுமுகமாக தொழில் அமர்த்துனர் தமது வேலைத்தளத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவை ஏற்படும்.

- திறன் குறைவாக உள்ள வாடிக்கையாளர்களுக்கும்; உணவு விடுதிகள், ஹோட்டல்கள், பட தியேட்டர்கள், அப்பார்ட்மன்ட் கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் ஏனைய பொது இடங்களுக்கு உட்புகுதலுக்கு சம உரிமையும், சமமாக நடத்தப்படுவதற்கு உரிமையும் உண்டு. திறன் குறைந்த மாணவர்கள் உட்புகும் உரிமையை பாடசாலைகளும் உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

- உங்கள் இனம், பால், வயது, நிறம், திறன் குறைந்த தன்மை போன்றவற்றின் காரணமாக உங்களுக்கு வாடகைக்கு விடுவதை வீட்டுச் சொந்தக்காரர்கள் மறுக்க முடியாது. குடியிருப்பு வசதியில் சமமான உரிமைகளுக்கான மையத்தை (Centre for Equality Rights in Accommodation) (416 –944-0087) மேலதிக தகவல்களுக்காக நீங்கள் அழைக்க முடியும்.

*சட்டத்தொகுப்பின்* கீழ் உங்கள் உரிமைகள் அல்லது பொறுப்புகளுள் யாதாயினும் ஒன்று தொடர்பாக உங்களுக்கு கேள்விகள் இருந்தால், இலவச சட்ட தகவல் மற்றும் ஆலோசனைக்காக நீங்கள் ARCH ஐ தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் உளநல திறன்குறைந்த தன்மையின் காரணமாக, உங்கள் மேலதிகாரி, வீட்டுரிமையாளர் அல்லது ஓர் சேவை வழங்குனர் போன்ற யாதாயினுமொருவர் உங்களை வேறுபாடாகவும் நியாயமற்ற முறையிலும் நடத்துவதாக நீங்கள் உணர்ந்தால், ஒன்ராறியோவின் மனித உரிமைகள் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு ஓர் விண்ணப்பத்தை தாக்கல் செய்யலாம். மேன்முறையீட்டு நீதிமன்றிற்கான விண்ணப்பங்கள், நீங்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்ட ஒரு வருடத்திற்குள் பொதுவாக தாக்கல் செய்யப்படல் வேண்டும். ஆனால் ஒரு வருடத்திற்குப் பின்னர் ஓர் விண்ணப்பத்தை செய்வதும் சாத்தியமாகலாம்.

எவ்வாறு ஒரு மனித உரிமைகள் விண்ணப்பத்தை தாக்கல் செய்வது என்பது பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் விரிவுகட்காக, மேன்முறையீட்டு நீதிமன்றினை தொடர்பு கொள்ளுங்கள்.

ஒன்ராறியோவின் மனித உரிமைகள் மேன்முறையீட்டு நீதிமன்று
655 bபே வீதி, (Bay Street), 14 ஆவது தளம்
ரொறன்ரோ, ஒன்ராறியோ M7A 2A3

உள்ளூர் தொலைபேசி விசாரணை: (416) 326 –1312
கட்டணம் அற்ற தொலைபேசி விசாரணை: 1-866-598-0322
TTY (உள்ளூர்): (416) – 326 – 2027
TTY (கட்டணம் அற்ற): 1-866-607-1240
இணையத் தளம்: www.hrto.ca.

ஓர் விண்ணப்பத்தை தாக்கல் செய்வது, சட்ட உதவி பெறுவது என்பது பற்றியும்; ஓர் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட பின்பு பிரதிநிதித்துவம் செய்வது என்பது பற்றியும் சுயேச்சையான சட்ட ஆலோசனையை மனித உரிமைகள் சட்ட ஆதரவு மக்களுக்கு கொடுக்கும். மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையத்தின் (Human Rights Legal Support Centre) சேவைகளைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து மையத்தைத் தொடர்பு கொள்ளவும்.

மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம்
400 யுனிவேர்ஸிட்டி அவெனியு, 7 ஆவது தளம்
ரொறன்ரோ, ஒன்ராறியோ
உள்ளூர் தொலைபேசி விசாரணைகள்: (416) 314-6266
கட்டணமற்ற தொலைபேசி விசாரணை: 1-866-625-5179
TTY: (416) 314-6651
TTY (கட்டணமற்றது): 1-866-612-8627
இணையத் தளம்: www.hrlsc.on.ca

## கனடிய மனித உரிமைகள் சட்டம்

*கனடிய மனித உரிமைகள் சட்டமானது;* வங்கிகள், விமான சேவைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள், தொலைபேசி கம்பனிகள், புகையிரத சேவைகள் மற்றும் சுரங்க நடவடிக்கைகள் போன்ற சமஷ்டி தொழில் வழங்குனர்கள் அல்லது சேவை வழங்குனர்களால் ஏற்படும் பாகுபடுத்தல்களை நிறுத்துமுகமாக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் இனம், நிறம், பால், திறன் குறைந்த தன்மை, வயது போன்றவற்றின் காரணமாக ஓர் சமஷ்டி தொழில் வழங்குனர் அல்லது சேவை வழங்குனர் உங்களுக்கு பாகுபாடு காட்டுவது அல்லது தொந்தரவு கொடுப்பது சட்டத்திற்கு எதிரானது. 'திறன் குறைந்த தன்மை' என்பது உளத்திறன் குறைந்த தன்மையையும், உளநல சேவைகளையும் ஆதரவுகளையும் பயன்படுத்தும் மக்களையும் உள்ளடக்கும்.

நீங்கள் கனடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மனித உரிமைகள் முறையீட்டை ஒரு வருடத்தினுள் தாக்கல் செய்யலாம். ஓர் முறைப்பாட்டை தாக்கல் செய்வதற்கு; ஆணைக்குழுவுடன் தொலைபேசி, தொலைநகல் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

கனடிய மனித உரிமைகள் ஆணைக்குழு
344 ஸ்லாட்டர் வீதி, 8வது தளம்
ஒட்டாவா, ஒன்ராறியோ, K1A 1E1

தொலைபேசி :(613) 995 – 1151
கட்டணமற்றது: 1-888-214-1090
TTY: 1-888-643-3304
தொலைநகல்: (613) 996-9661
இணையத்தளம்: http://www.chrc-ccdp.ca/.

நீங்கள் ஒரு சமஷ்டி தொழில் வழங்குனர் அல்லது சேவை வழங்குனருக்கு எதிராக மட்டுமே கனடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் முறைப்பாட்டை தாக்கல் செய்யலாம். ஓர் கடை, ஒரு உணவு விடுதி, ஒரு ஹோட்டல், வைத்தியசாலைகள், ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குனர், பாடசாலை, கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்திற்கு எதிரானதாக உங்கள் முறைப்பாடு இருக்குமாயின் உங்கள் மாகாண மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உங்கள் முறைப்பாட்டைச் செய்ய வேண்டும். மாகாணங்களும் பெரு நிலப்பகுதிகளும் பாகுபாடு காட்டலுக்கு எதிராக ஒத்த சட்டங்களைக் கொண்டுள்ளன.

## உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் பட்டயம்

---

*உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் பட்டயத்தின்* கீழ் பாதுகாக்கப்படும் சில உரிமைகள் உங்களுக்கு உண்டு. *பட்டயமானது* கனடாவின் ‘உயர் சட்டமான’ அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியாகும். *பட்டயமானது* சட்டங்கள் மற்றும் அரசாங்க நடவடிக்கைகளால் பாகுபடுத்தலுக்குட்படாது மக்களைப் பாதுகாக்கின்றது. இது உங்கள் இனம், வயது, பால், திறன்குறைந்த தன்மை போன்றவற்றிற்கு எதிராக பாகுபடுத்தப்படாது ஒவ்வொருவருக்கும் ஒரே நலன்களையும் சட்டத்தில் ஒரே பாதுகாப்பையும் வழங்குகின்றது. ஓர் ‘திறன் குறைந்த தன்மை’ என்பது உளநல பிரச்சனைகளை உள்ளடக்கும்.

அரசாங்கங்கள் சட்டங்களை உருவாக்கும்போது *பட்டயத்திற்குக்* கட்டுப்பட்டவையாக இருக்கும். நீதிமன்ற வழக்குகளின்போது நீதிமன்றங்கள் *பட்டயத்தைக்* கவனத்திற் கொள்ள வேண்டும். ஓர் சட்டம் அல்லது அரசாங்க நடவடிக்கையானது *பட்டயத்தை* மீறினால்; நாங்கள் இந்த சட்டங்களை நீக்கிவிடுமாறு நீதிமன்றங்களைக் கேட்க முடியும்.

*பட்டயமானது,* சட்டங்கள் மற்றும் அரசாங்க நடவடிக்கைகட்கு மட்டுமே பிரயோகிக்கப்படக் கூடியது. ஓர் தனியார் நடவடிக்கைகள்; உங்களுக்கெதிராக பாகுபாடு காட்டினால், நீங்கள் உங்கள் மாகாண அல்லது பெரு நிலப்பரப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவை அழைக்க வேண்டும்.
நீங்கள் பாகுபாடு காட்டப்பட்டீர்கள் என நிரூபிப்பதற்கு:

- நீங்கள் ஏனையவர்களை விட வேறுபாடாக நடத்தப்பட்டீர்கள்;
- இந்த வேறுபாடாக நடத்தப்படலானது; இனம், மதம், பால், வயது, திறன் குறைந்த தன்மை போன்றவற்றின் காரணமாகவே இருந்தது.
- இந்த வேறுபாடாக நடத்தப்படலானது ஏனைய மக்களைப் போல் அதே மரியாதையுடன் இந்த நபர் நடத்தப்படத் தகுதியற்றவர் என்பதைக் காட்டுவதாக அமைந்திருந்தது.

என நீங்கள் காட்ட வேண்டும்.

நீங்கள் பாகுபடுத்தப்பட்டவர் என்பதை நிரூபிக்க முடியாவிடினும்; இந்த நடத்துகையானது ‘ஓர் சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான சமூகத்தில் நியாயமானதும் விளங்கிக் கொள்ளக் கூடியதுமாக’ இருந்தால்; *பட்டயத்தின்* கீழ் சட்டமானது இன்னும் சிறந்ததாகவே இருக்க முடியும்.

உங்கள் *பட்டய* உரிமைகளை ஒரு சட்டம் அல்லது அரசாங்கமானது மதிக்கவில்லை என நீங்கள் எண்ணினால்; அரசாங்கத்தை நீங்கள் நீதிமன்றுக்கு கொண்டு செல்லலாம். இது ஒரு பெரிய படிமுறையாகும். நீதிமன்றுக்கு போக முன்பு, நீங்கள் நலன்களையும் சாத்தியமான விளைவுகளையும் பற்றி சிந்திப்பது முக்கியமாகும். எடுத்துக் காட்டாக, சட்டம் சார்ந்த கட்டணங்கள் மிகவும் செலவு மிக்கவையாகும். இது மிக நீண்ட காலத்தையும் எடுக்கலாம். இந்த விடயத்தில் ஆர்வமுள்ள ஏனையோருடன் இணைந்து செயலாற்ற நீங்கள் விரும்பலாம். ARCH திறன் குறைந்தமை தொடர்பான சட்ட மையம் உட்பட அநேக வெவ்வேறு அமைப்புகள், பட்டய சவால்களில் ஈடுபட்டுள்ளன.

## ஏனைய பாதுகாப்புக்கள்

---

சில வேலைத் தளங்கள் **பாகுபாடு காட்டலுக்கு எதிரான கொள்கைகளைக்** கொண்டுள்ளன. நீங்கள் தொழிற் சங்க உறுப்பினராக இருந்தால்; உங்கள் சங்க பணியாளரை மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள முடியும். சில வைத்தியசாலைகளில் பாகுபடுத்தல் கொள்கைகள் உள்ளன. உங்கள் வைத்தியசாலையின் விதிகள் தொடர்பான தகவல்களுக்காக உங்கள் நோயாளர் பிரதிநிதிகளை அல்லது வாட்டு ஊழியரைக் கேளுங்கள்.

ஓர் **சமூக சட்ட சிகிச்சை நிலையத்திலிருந்து** உங்கள் மனித உரிமைகள் தொடர்பாக நீங்கள் ஆலோசனையையும் பெற முடியும். சமூக சட்ட சிகிச்சை நிலையங்கள், குறைந்த வருமான மக்களுக்கும் சமூகங்களுக்கும் சட்ட சேவைகளை வழங்குகின்றன. உங்களுக்கு அண்மையிலுள்ள சமூக சட்ட ஆலோசனையைப் பற்றி அறிவதற்காக 416-979-1446 ஐ அழையுங்கள். அத்துடன், யோர்க் பல்கலைக்கழகத்தின் **சமூக சட்ட உதவி சேவைகள் நிகழ்ச்சித் திட்டமானது (Community Legal Aid Services Program – CLASP)** உளநல பிரச்சனைகளுடனான மக்களுக்கு சேவைகளை வழங்குகின்றது. நீங்கள் அவர்களை 416-736-5029 இல் தொடர்பு கொள்ள முடியும்.

ஓர் நீதிமன்ற வழக்கை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஓர் சட்டத்தரணியுடன் கதைப்பது முக்கியமானதாகும். இதற்கு கால வரையறை உண்டு என்பது, நீங்கள் பாகுபாடு காட்டப்பட்ட பின் மிகவும் விரைவாக ஓர் நீதிமன்ற வழக்கை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்பதை கருதும்

ஓர் ஒன்ராறியோ சட்டத்தரணியை நீங்கள் அமர்த்த விரும்பினால்; மேல் கனடாவின் சட்ட சமூகத்தால் (Law Society of Upper Canada) நடத்தப்படும் **சட்டத்தரணிகள் அறிமுக சேவையை அழைக்கலாம்.** சட்டத்தரணி அறிமுக சேவையானது பாகுபாடு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளில் ஈடுபடும் சட்டத்தரணியின் பெயரை உங்களுக்கு வழங்குவதுடன், அரை மணித்தியால இலவச ஆலோசனையையும் வழங்கும். இந்த சேவைக்கான தொலைபேசி இலக்கம் 1-800-268-8326; 416-947-3330.

## ARCH ஐப் பற்றி

---

ARCH திறனற்ற தன்மை தொடர்பான சட்ட மையமானது: உளநல பிரச்சனைகளுடனான மக்கள் உள்ளிட்ட திறன்குறைந்த தன்மைகளுடனான மக்களின் சமமான உரிமைகளுக்காக போராடவும் முன்னேற்றுவதற்குமாக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் சிறப்பான சட்ட உதவி சிகிச்சை நிலையமாகும்.

பாகுபடுத்தல் பற்றிய தகவல் உள்ளிட்ட இலவசமான, அந்தரங்கமான, அடிப்படை சட்டரீதியான தகவல்களை திறன் குறைந்த மக்களுக்கு ARCH வழங்குகின்றது. ARCH இந்த சேவைகளை தொலைபேசியினூடாக வழங்குகின்றது. உங்கள் திறன் குறைந்த தன்மையின் காரணமாக உங்களால் தொலைபேசியினூடாக எங்களுடன் பேசமுடியாவிடின், உங்கள் தேவைகளைச் சந்திக்கக் கூடியவிதமாக உங்களுடன் தொடர்பு கொள்ள நாம் முயற்சி செய்வோம்.

425 புளோர் வீதி கிழக்கு, அறை 110
ரொறன்ரோ, ஒன்ராறியோ, M4W 3R5
தொலைபேசி: 416-482-8255
கட்டணமற்ற: 1-866-482-2724
TTY: 416-482-1254
கட்டணமற்ற: 1-866-482-2728
தொலைநகல்: 416-482-2981
கட்டணமற்ற: 1-866-881-2723
www.archdisabilitylaw.ca